**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **பாலசந்திரன் (கிராம உதவியாளர்)** |
| Father's /Husband Name | : | பழமலை |
| Address | : | **சத்திரமனை** |
| Age | : | 38/2025 |

**<u>தேதி : 24.03.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கிராம உதவியாளராக சத்திரமனை கிராமத்தில் பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு பொம்மனப்பாடி கிராம உதவியாளராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். 08.06.2020 அன்று மதியம் 2.00 முதல் 3.00 மணிக்குள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தகவல் வந்ததன் பேரில் நானும், அ.சா.1ம் சத்திரமனை அருகே பொம்மனப்பாடி எல்லைக்குட்பட்ட புல எண். 152/16 பகுதிக்கு சென்றோம். அங்கு ஏற்கெனவே வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், குழந்தை பாதுகாப்பு அலுவலர், ஆர்.டி.ஓ., ஆகியோர்கள் வந்திருந்தனர். அவர்களை விசாரித்தபோது இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்ப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அங்கு வந்திருப்பதாக சொன்னார்கள்.கண்ணன் என்பவருடைய ஆடுகளை மேற்படி சிறுவர்கள் மேய்ப்பதாக சொன்னார்கள். மேலும் அந்த இரு சிறுவர்களை பற்றி விசாரித்தபோது மதிவாணன், முருகன் என்று தெரியவந்தது. மேலும் அவர்களுக்கு முறையே 10 மற்றும் 13 வயது என்று தெரியவந்தது.

மேற்படி சிறுவர்களை குழந்தைகள் நல குழுவிற்கு அழைத்து சென்றார்கள். இது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் புகார் அளித்தார். பெரம்பலூர் போலீஸார் என்னை அன்றைய தினமே விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு நாங்கள் 2.00 மணி முதல் 3.00மணிக்குள் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். போலீஸார் என்னை அன்றைய தினமே (08.06.2020) அன்று விசாரித்தார்கள். மறுபடியும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.